# ஆயிரம் ஆயிரம் இளைஞர்கள் வாழ்வில் நம்பிக்கையை நடவு செய்த முதல்வர்!

இனி பெரியார் அச்சில்
உலகம் சுழலும்
மாண்புமிகு முதல்வரே,
தளபதி அவர்களே,
உங்களின் இலட்சியம்
தமிழ்நாட்டை உயர்த்துவது
தமிழை உயரச் செய்வது
தமிழினத்தை வளர்ப்பது!

உங்கள் பயணத்தால்
உலகத் தமிழர்களின்
தலைநகரானது ஜெர்மனி!
அயலகத் தமிழர்களின்
அன்புத் திருவிழாவில்
ஜெர்மனி சிலிர்த்தது!

இந்தியாவின் ஜெர்மனி
தமிழ்நாடு என்றே
இதயப் பாலத்தை
இணைத்து வைத்தீர்!

முதலீட்டாளர் சங்கமத்தை
முன்னின்று நடத்தினீர்கள்!

தமிழ்நாட்டின்
தொழில் வளர்ச்சிக்கும்
பொருளாதார வளர்ச்சிக்கும்
ஒப்பந்தங்கள் செய்தீர்!

ஒரு பயணத்தில் கோடி
விடியல்களை உதிக்கச்
செய்தீர்கள்!

ஆயிரம் ஆயிரம்
இளைஞர்கள் வாழ்வில்
நம்பிக்கை வெளிச்சத்தை
நடவு செய்தீர்கள்!





இங்கிலாந்து மண்ணில்
உங்களுக்கு திரும்பிய
திசையெல்லாம்
வசந்த வரவேற்பு!

'திராவிட மாடல்' தலைவரே,
அந்நாட்டின்அத்தனை
கதவுகளும்
அகலத் திறந்தன;
போற்றிப்புகழ்ந்தன!

சந்திப்புகள் அனைத்தும்
சரித்திரமாயின;
தமிழ்நாட்டின் தொழில் புரட்சிக்கு
அடித்தளமாயின!

அறிவுலகத் தாய்
ஆக்ஸ்ஃபோர்டு பல்கலைக்
கழகத்தில்
அறிவுலகத் தந்தை
தத்துவப் பேராசான்
பெரியாரின் படத்தை
திறந்து வைத்தீர்கள்!

கேள்விப் புரட்சியால்
சமூக மாற்றத்தை
உருவாக்கிக் காட்டிய
தமிழ்நாட்டின் சிற்பி!

உலகின்
சிந்தனைத் தேடலுக்கு
தந்தை பெரியாரை
முதலீடாய் தந்தீர்கள்!

இனி பெரியார் அச்சில்
உலகம் சுழலும்

பெரியார்பேரனே!
அண்ணாவின் அன்புத் தம்பி
கலைஞரின் தமிழ்மகனே
உங்கள் அத்தனை பயணத்திலும்
தமிழ்நாடு வெற்றிகள் சூடும்!
திராவிட மாடலை
திசைகள் வணங்கும்!




**கு.வாஞ்சிநாதன்**
தலைமைக் கழகப்
பேச்சாளர்
கடலூர்


## 2026 சட்டமன்றத் தேர்தலில்

# மீண்டும் கழக ஆட்சி அமைய முனைப்புடன் பணியாற்றுவோம்!

## கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட இளைஞர் அணி கூட்டத்தில் தீர்மானம்! தே.மதியழகன் எம்,எல்,ஏ, சிறப்புரை!

கிருஷ்ணகிரி, செப். 9 -

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்ட திமுக மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் ஆலோசானைக் கூட்டம் கிருஷ்ணகிரியில் மாவட்ட கழக செயலாளரும், சட்டமன்ற உறுப்பினருமாள மதியழகன் தலைமையில், மாநில இளைஞர் அணி துணை செயலாளர் சீனிவாசன் முன்னிலையில், மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் ஏற்பாட்டில் கூட்டம் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மா னங்கள்.

தமிழகத்திலேயே முதன் முறையாக கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் கலைஞர் நூலகம் துணை முதலமைச்சர் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது. பர்கூர், ஊத்தங்கரை சட்ட மன்ற தொகுதிகளில் நூலகம் அமைப்பதற்கான இடங்கள் தேர்வு செய்யப்பட்டுள்ளன. அந்த இடங்களில் நூலகம் அமைப்ப தற்கான பணிகளை இளைஞர் அணியினர் விரைந்து செயல்படுத்தி அதனை மாணவர்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வருவது எனவும்

கழக இளைஞர் அணி செயலாளரும், தமிழ்நாடு துணைமுதலமைச்சருமான இளந்தலைவர் அவர்களின் சீரிய முயற்சியாலும் கிருஷ்ண கிரி கிழக்கு மாவட்டத்திற்கு உட்பட்ட ஒன்றிய, நகர, பேரூர் அமைப்புகளுக்கு அமைப்பாளர், துணை அமைப்பாளர்கள் நியமிக்கப்பட்டவர்கள் சிறப்பாக செயல்படுவது எனவும், இதனை கிளை, வார்டு கழகங்கள் வரை விரைவுப்படுத்தப்பட வேண்டும் என்ற இளந்தலைவர் அவர்களின் ஆணைப்படி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள அனைத்து கிளை, வார்டு கழகங்களிலும் இளைஞர் அணி நிர்வாகிகள் நியமிப்பதற்கான விண்ணப்பங்களை அனைத்து ஒன்றிய, நகர, பேரூர் கழக செயலாளர்களிடம் வழங்கப்பட்டு பூர்த்தி செய்த விண்ண ப்பங்களை மாவட்ட கழகத்திடம் வழங்க வேண்டும் எனவும்

கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டத்தில் உள்ள மூன்று சட்டமன்ற தொகுதிகளில் பாகத்திற்கு ஓர் இளைஞர் வீதம் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள இளைஞர்களுக்கு சமூக வலைதளப் பயிற்சி வழங்குவது எனவும், இதன் மூலம் கழக அரசின் சாதனைகளை சமூக வலைத்தளம் மூலம் எதிர்கட்சிகளின் பொய் பிரச்சாரங்களை தவிடுபொடியாக்கி, மீண்டும் நமது "திராவிட மாடல்" அரசின் முதல்வராக கழக தலைவர் தளபதியார் அவர்களை அரியணையில் ஏற்றிட பாடுபடுவோம் எனவும் ,

திராவிட மாடல் அரசின் நான்காண்டு சாதனைகளை மக்களிடம் எடுத்துச் செல்லும் வகையிலும் கழகத் தலைவர், இளந்தலைவர் மற்றும் தலைமை கழக செய்திகளை சமூக வலைத்தள பக்கங்களில் பரப்பிடும் வகையில் அவற்றை விருப்பம், பகிர்வது, பின்னூட்டம் இடுவது போன்ற செயல்பாடுகளை மாவட்ட, ஒன்றிய, நகர, பேரூர், கிளை, வார்டு கழக இளைஞர் அணி நிர்வாகிகள் செய்திட வேண்டும். இதன் மூலம் இளைஞர் அணி நிர்வாகிகள் அனைத்து வலைதளங்களிலும் முனைப்பாக செயல்பட வேண்டும் என இக்கூட்டம் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

இந்த கூட்டத்தில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், துணைச் செயலாளர் சாவித்திரி, பொருளாளர் கதிரவன், பொதுக்குழு உறுப்பினர் நாகராஜ், மாவட்ட துணை அமைப்பாளர்கள் சக்திவேல், சங்கர், மகேந்திரன், சரவணன், லயேலா ராஜசேகர், சங்கர் உள்ளிட்ட நகர, ஒன்றிய, பேரூர் இளைஞரணியினர் ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி சட்டப்பேரவை தொகுதி சோமநாதபுரத்தில் மாவட்ட இளைஞரணி சார்பில் கலைஞர் நூலகம் திறப்பு விழா நடைபெற்றது. நிகழ்ச்சியில், வனத்துறை அமைச்சர் ஆர்.எஸ்.ராஜகண்ணப்பன் நூலகத்தை திறந்து வைத்து புத்தகங்களை பார்வையிட்டதுடன் மாணவ,மாணவிகளுடன் அமர்ந்து அவர்களை புத்தகங்களை வாசிக்க கூறி வாழ்த்து தெரிவித்தார். இந்த நூலகத்தில் 2 ஆயிரத்திற்கும் மேற்பட்ட புத்தகங்கள் வைக்கப்பட்டுள்ளது. அரசுப்பணிக்கு படிக்கும் மாணவ,மாணவிகள் பயன்பெறும் வகையில் கலைஞர் நூலகம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த நிகழ்ச்சியில், இராமநாதபுரம் மாவட்ட கழகச் செயலாளர், உறுப்பினர்கள் காதர்பாட்ஷா முத்துராமலிங்கம், பரமக்குடி சட்ட மன்ற உறுப்பினர் செ.முருகேசன், மாநில இளைஞரணி துணைச்செயலாளர் G.P,ராஜா, மற்றும் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் சம்பத் ராஜா பரமக்குடி நகர் இளைஞர் அணி அமைப்பாளர் துரைமுருகன் உட்பட பரமக்குடி நகர் செயலாளர்கள் சேது கருணாநிதி,ஜீவானந்தம், மற்றும் மாநில,மாவட்ட,ஒன்றிய,நகர் கழக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

## ஆசிரியர் தினம்: கரூர் மாவட்டத்தில்

# ரூ.30.95 லட்சம் மதிப்பீட்டில் ஆசிரியர்கள் - மாணவர்களுக்குப் பரிசு!

## மாவட்டச் செயலாளர் வி.செந்தில் பாலாஜி எம்.எல்.ஏ. வழங்கினார்!

கரூர், செப்.9-

ஆசிரியர் தினத்தை முன்னிட்டு கரூர் மாவட்டத்தில் 2,046 ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கு ரூ. 30.95 லட்சம் மதிப்பீட்டில் ரொக்கப் பரிசுகள் மற்றும் பாராட்டுச் சான்றிதழ்களை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி. செந்தில்பாலாஜி வழங்கினார்.



கரூர் அட்லஸ் கலையரங்கத்தில் ஆசிரியர் தின விழா நடைபெற்றது. கரூர் மாவட்ட கலெக்டர் மீ. தங்கவேல் தலைமை வகித்தார். ஆசிரியர் தினத்தை முன்னிட்டு நடைபெற்ற விழாவில், 10 மற்றும் 12 ம் வகுப்பில் 100 சதவீத தேர்ச்சி வழங்கிய ஆசிரியர்கள், மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் மாணாக்கர்களை பங்கேற்க செய்த உடற்கல்வி ஆசியர்கள் மற்றும் மாவட்ட, மாநில அளவில் சிறப்பு நிலை தகுதி பெற்ற மாணாக்கர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் பரிசுகளை கரூர் சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட கழக செயலாளர் வி.செந்தில் பாலாஜி வழங்கினார்.

**விழாவில் வி.செந்தில் பாலாஜி பேசியதாவது:**

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணாக்கர்களின் எதிர்காலத்தை கருத்தில் கொண்டு. எண்ணற்ற திட்டங்களை அறிவித்து செயல்படுத்தி வருகிறார்கள். அந்த வகையில் இன்றைய தினம் ஒரு மகிழ்ச்சிக்குரிய நாளாக, திருநாளாக நாம் வாழ்க்கையில் எல்லா வகையிலும் சந்தோஷப்படக்கூடிய ஒரு நாளாக இந்த நாள் அமைந்திருக்கிறது. அதற்கு காரணம் இங்கே அரங்கத்தில் அமர்ந்திருக்கக்கூடிய நல்லாசிரியர் விருது பெற்ற ஆசிரியர் பெருமக்கள் 100% தேர்ச்சி வழங்கிய தலைமை ஆசிரியர் பெருமக்கள் ஆவர்.

முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் எந்தெந்த துறைகளுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் என்பதை கணித்து அதற்கான நிதிகளை கொடுத்து, அந்த துறைகளை வளர்த்து அதற்கான பெருமைகளை சேர்க்கக்கூடிய ஒரு அரசாக திராவிட மாடல் அரசை வழிநடத்தி வருகிறார்கள். தமிழ்நாட்டைப் கல்வியில் இந்தியாவில் முதன்மை மாநிலமாக உயர்த்தியதை நாம் நினைத்து பார்த்திட வேண்டும்.

உங்களைப் போல நானும் ஒரு அரசு பள்ளியில் படித்த மாணவன். அந்த வகையில் நாம் அனைவரும் ஒரு குடும்பம். முதலமைச்சர் அவர்கள், யாரும் சிந்திக்காத ஒரு மகத்தான திட்டமாக முதலமைச்சரின் காலை உணவுத் திட்டம் என்ற ஒரு சிறப்பு வாய்ந்த திட்டத்தை தொடங்கி வைத்து, அரசு பள்ளிகள் மற்றும் அரசு உதவி பெறுகின்ற பள்ளியில் படிக்கக்கூடிய குழந்தைகளுக்கு மிகச் சிறப்பான திட்டமாக உலகத்திற்கு வழிகாட்டக்கூடிய திட்டமாக செயல்படுத்தி வருகிறார்கள். மற்ற மாநிலங்களில் செயல்படுத்துவதை விட உலக நாடுகள் அறிந்து அந்தந்த நாடுகளில் செயல்படுத்தக்கூடிய அளவிற்கு முன்னோடி திட்டங்களான முதலமைச்சர் இல்லம் தேடி கல்வித் திட்டம். எண்ணும் எழுத்தும் திட்டம். நான் முதல்வன் திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம். போன்ற சிறப்பு வாய்ந்த திட்டங்கள் பள்ளி கல்வித்துறையில் செயல்படுத்தப்படுகிறது.

நம்முடைய மாவட்டத்திற்கு ஒரு அரசு வேளாண்மை கல்லூரி மற்றும் ஒரு அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, தரகம்பட்டியில் அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரிக்கு புதிய கட்டிடத்தை கொடுத்து அந்த கட்டிடத்தையும் முதலமைச்சர் அவர்கள் திறந்து வைத்துள்ளார்கள்.

கரூர் மாவட்டத்தில் 67 அரசு ஆரம்ப நடுநிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளுக்கு 113 வகுப்பறை கட்டிடங்கள், ரூ.23 கோடி மதிப்பீட்டிலும், 74 பள்ளிகளுக்கு ரூ 2.5 கோடி மதிப்பீட்டில் கழிப்பறை கட்டிடங்கள், 14 பள்ளிகளுக்கு 86 சமையலறை கட்டிடங்கள், 12 பள்ளிகளுக்கு ரூ.1.32 கோடி மதிப்பீட்டில் சுற்றுச் சுவர்கள் 69 பள்ளிகளில் பயிலும் 22.831 மாணவ மாணவிகளுக்கு ரூ 8 கோடி ரூபாய் மதிப்பீட்டில் மிதி வண்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன. 493 ஸ்மார்ட் வகுப்புகள் ரூ.10 கோடி மதிப்பீட்டில் அமைக்கப்பட்டு இருக்கின்றன.

இப்படி தொடர்ச்சியாக கரூர் மாவட்டத்தில் கல்வித் தரத்தை மேம்படுத்துவதற்காக இந்த 4 ஆண்டுகளில் பல்வேறு சிறப்புகளை முதலமைச்சர் அவர்கள் வழங்கி இருக்கின்றார்கள். முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பொற்கால ஆட்சியில் தான் சமச்சீர் கல்வி கொண்டுவரப்பட்டன. அதே போல பள்ளியில் காலை உணவோடு சேர்த்து முட்டைகளை தந்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். காமராஜர் பிறந்த நாளை கல்வி மேம்பாட்டு நாளாக அறிவித்தவர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்கள். மாவட்ட ஆட்சித் தலைவரும் சரி, நானும் சரி, மாணாக்கர்களுக்கு உதவ தயாராக இருக்கின்றோம்.

அதேபோல பத்தாம் வகுப்பு மற்றும் 12ஆம் வகுப்பு மாணவச் செல்வங்களுக்கு தேவையான வினா விடை வங்கி புத்தகங்களை தயார் செய்து வழங்கி, உயர்கல்விக்கு செல்லக்கூடிய நிலையை உருவாக்கியுள்ளோம். அதோடு மட்டுமில்லாமல், டி.என்.பி.எஸ்.சி போன்ற அரசு போட்டித் தேர்வுகளுக்கு தயாராகி வருவோருக்கு எந்த வித கட்டணமும் இல்லாமல் பயிற்சிகளை வழங்கி அடுத்த நிலைக்கு அழைத்துச் செல்வது என உங்களோடு இணைந்து சிறப்பான பணிகளை முன்னெடுத்து இருக்கின்றோம்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் விளையாட்டு துறையை இந்தியாவில் தமிழ்நாட்டை தலைநகராக உயர்த்தியிருக்கக்கூடிய வழிகாட்டுதலோடும் சிறப்பு மிக்க மாவட்டமாக நாம் உருவாக்கிடுவோம். தொடர்ந்து விளையாட்டு போட்டிகளை நடத்தி ஆண்டு தோறும் பரிசுகளை வழங்கி வருகிறோம். சிலர் ஆசிரியருக்கு ஐம்பதாயிரம் சம்பளமா என்றெல்லாம் பேசிவிட்டு ஆசிரியர் தினம் வந்தவுடன் அவரது காலில் போய் விழுந்து வணங்குகின்றனர். அவர்களைப் போல அல்ல நாம். இவ்வாறு செந்தில் பாலாஜி பேசினார்.

தொடர்ந்து, ஆசிரியர் தின விழாவை முன்னிட்டு 7 ஆசிரியர்களுக்கு நல்லாசிரியர் விருது, 10 மற்றும் 12 ஆம் வகுப்பில் 100 சதவீத தேர்ச்சி வழங்கிய 1185 ஆசிரியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள், கேடயங்கள் மற்றும் ஸ்மார்ட் வாட்ச்கள், 129 தலைமை ஆசிரியர்கள் மற்றும் மாநில அளவில் நடைபெற்ற விளையாட்டு போட்டிகளில் மாணாக்கர்களை பங்கேற்க செய்த உடற்கல்வி ஆசியர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள். கேடயங்கள் மற்றும் ஸ்மார்ட் வாட்ச்கள். மாவட்ட மாநில அளவில் சிறப்பு நிலை தகுதி பெற்ற 619 மாணாக்கர்களுக்கு பாராட்டு சான்றிதழ்கள் மற்றும் கேடயங்கள் தலா ரூ.5,000 ரொக்கம் மற்றும் ஸ்மார்ட் வாட்ச்கள் என மொத்தம் 2046 ஆசிரியர்கள் மற்றும் மாணாக்கர்களுக்கு ரூ.30.95 லட்சம் மதிப்பீட்டில் பரிசுகளை தனித்தனியாக அனைவருக்கும் வழங்கினார்.

இவ்விழாவில் சட்டமன்ற உறுப்பினர்கள் இரா. மாணிக்கம், (குளித்தலை), ஆர். இளங்கோ (அரவக்குறிச்சி), க.சிவகாமசுந்தரி (கிருஷ்ணராயபுரம்).கரூர் வருவாய் கோட்டாட்சியர் முகமது பைசல், மாவட்ட முதன்மை கல்வி அலுவலர் (பொ)செல்வமணி. மண்டலக் குழுத் தலைவர்கள் ஆர் எஸ்.ராஜா, சக்திவேல், ஒன்றிய கழகப் பொறுப்பாளர்கள் வேலுச்சாமி, முத்துக்குமாரசாமி, பள்ளி ஆசிரியர்கள். மாணவ மாணவிகள் கலந்து கொண்டனர்.



கள்ளக்குறிச்சி வடக்கு மாவட்டம், சின்னசேலம் வடக்கு ஒன்றியம் கடத்தூர் ஊராட்சியில், வடக்கு மாவட்ட கழக செயலாளர், சங்கராபுரம் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தா.உதயசூரியன் தலைமையில் கழகத்தின் ஆணி வேரான கிளை கழகம் சார்பில் பொது உறுப்பினர் கூட்டம் நடைபெற்றது, இதில் ஒன்றிய கழக செயலாளர், ஒன்றிய குழு துணை தலைவர், அ.வெ.அன்புமணிமாறன் முன்னிலை வகித்து சிறப்பித்தார், மேலும், இந்த கூட்டத்தில் கிளை கழக செயலாளர் சக்திவேல், மணிவண்ணன் வரவேற்புரை ஆற்றினார்கள், ஊராட்சி மன்ற தலைவர் பேபி அய்யாசாமி ஒன்றிய இளைஞரணி துணை அமைப்பாளர் ஹரிகிருஷ்ணன் ஆகியோர் கூட்டத்தின் முடிவில் நன்றியுரை கூறினார்கள்.



திராவிட மாடல் முதலமைச்சர் கழகத் தலைவர் மு.க.ஸ்டாலினின் அவர்களின் தலைமையை ஏற்றும் சிறப்பான நிர்வாக திறமையை கருத்தில் கொண்டு நெல்லை மேற்கு மாநகர அலுவலகத்தில் மேற்கு மாநகர பொறுப்பாளர் சு.சுப்பிரமணியன் முன்னிலையில் டவுண் 28வது வட்ட அ.ம.மு.க. செயலாளர் வானுவாமலை மற்றும் அ.ம.மு.க.நிர்வாகிகள் தாமாக முன்வந்து அக்கட்சியில் இருந்து விலகி கழகத்தில் தங்களை இணைத்துக் கொண்டனர். நிகழ்வில் நெல்லை பேட்டை கிழக்கு பகுதி பொறுப்பாளர் நமச்சிவாயம் கோபி, மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் அலிஃப் மீரான்,மாவட்ட பிரதிநிதி வேங்கை வெங்கடேஷ், மற்றும் நிர்வாகிகள் கேபிள் குமரேசன், லெனின், வைரமணி, முத்து,மகாராஜன், செந்தில்குமார், ஷெட்டி,மைக் மணி,சிவக்குமார், மணிகண்டன், வழக்கறிஞர் சுடலைகண், மஸ்தான், சங்கர், கார்த்திக், நாதன், கிருஷ்ணகுமார், முருகன், ராஜேஸ்வரி, ஜோதி பிரியா, வெங்கடேஷ் உள்பட பலர் கலந்து கொண்டனர்.